செய்தி வெளியீட்டு எண்–98 நாள்: 1.2.2010

# பத்திரிக்கை செய்தி

**மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக தமிழகத்திற்கு 2 தேசிய விருதுகள்**

தமிழ்நாட்டில் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் என்ற பெயரில்முதற் கட்டமாக 2.2.2006 முதல் இத்திட்டம் கடலூர், திண்டுக்கல், நாகப்பட்டினம், சிவகங்கை, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய 6 மாவட்டங்களிலும், இரண்டாவது கட்டமாக 1.4.2007 முதல் தஞ்சாவூர், திருவாரூர், திருநெல்வேலி மற்றும் கரூர் ஆகிய 4 மாவட்டங்களிலும், மூன்றாவது கட்டமாக 1.4.2008 முதல் மீதமுள்ள 20 மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டம் 2.10.2009 முதல் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் என்ற பெயரில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 13.5.2006 முடிய இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூ.3.00 கோடி மட்டுமே. இந்த அரசு மேற்கொண்ட பல்வேறு சிறப்பு நடவடிக்கைகள் மூலமாக, தமிழ்நாட்டில் இதுவரை 2939 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

நாட்டிலேயே இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் முதல் மூன்று மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இதற்காக மத்திய அரசும், மத்திய திட்டக்குழுவும் தமிழக அரசை பாராட்டியுள்ளன.

2007–08ஆம் ஆண்டில் இந்தியாவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் 612 மாவட்டங்களில் 13 மாநிலங்களிலுள்ள 22 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து மத்திய அரசு இந்த திட்டத்திற்கு விருது வழங்கியுள்ளது.

அதில் தமிழ்நாட்டில் இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக 3 மாவட்டங்கள் அதாவது திண்டுக்கல், சிவகங்கை மற்றும் கடலூர் தேர்ந்தெடுக்கப்பட்டு மத்திய அரசால் விருது வழங்கப்பட்டது.

2008–09ஆம் ஆண்டு இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக தேசிய அளவில் விருது வழங்கிட 15 மாநிலங்களைச் சேர்ந்த 24 மாவட்டங்கள் மத்திய அரசால் தேர்வு செய்யப்பட்டது. அதில், 9 மாநிலங்களுக்கு அதிகபட்சமாக தலா 2 விருதுகள் வழங்கப்படவுள்ளது. எஞ்சிய 6 மாநிலங்களுக்கு தலா ஒரு விருது வழங்கப்படவுள்ளது.

அதனடிப்படையில், தமிழ்நாட்டைச் சேர்ந்த நாகப்பட்டினம் மற்றும் விழுப்புரம் ஆகிய 2 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

02.02.2010 அன்று புதுதில்லியில் நடைபெறவுள்ள மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி சட்ட சம்மேளன விழாவில் நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் திரு.எம். ஜெயராமன் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் முனைவர் ஆர்.பழனிச்சாமி ஆகியோருக்கு இந்த தேசிய விருதுகள் வழங்கப்படவுள்ளன.

* * * * * *

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.